**11.11.2021 – மாலை 6.00**

**தமிழ்நாட்டில் கனமழை – முழு வீச்சில் நிவாரணப் பணிகள் – மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் தகவல்**

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் வடக்கு தமிழ்நாடு மற்றும் தெற்கு ஆந்திரா கடற்கரைக்கு இடைப்பட்ட பகுதியில் சென்னை அருகே தற்போது கரையை கடந்து வருகிறது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன் விளைவாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மழை பெய்துள்ளது.

இன்று காலை 6.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை சென்னை மாவட்டத்தில் 58.2 மி.மீ., செங்கல்பட்டில் 39.7 மி.மீ, காஞ்சிபுரம் 47.3 மி.மீ., திருவள்ளூர் 58.8 மி.மீ. மழை பெய்துள்ளது.

இன்று (11.11.2021) சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய மிக கன மழையும்,

தருமபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும்,

**12.11.2021** அன்று நீலகிரி, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும் பெய்யக்கூடும்.

**முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்படும் விபரம்**

செங்குன்றத்திலிருந்து 3,218 கன அடியும்,

சோழவரம் ஏரியிலிருந்து 2015 கன அடியும்,

செம்பரம்பாக்கத்திலிருந்து 2,151 கன அடியும்,

பூண்டியிலிருந்து 10,000 கன அடியும் திறந்து விடப்படுகிறது.

ஆந்திர மாநில பிச்சாட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்பட்டுள்ள 11,000 கன அடி ஆரணியாற்றில் திறந்து விடப்பட்டுள்ளதை தொடர்ந்து கரையோர கிராமங்களான ஊத்துக்கோட்டை, பெரியபாளையம், பொன்னேரி போன்ற ஆரணியாற்றின் இருபுறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு சமூக வலைதளங்கள் மூலமும், மாவட்ட நிர்வாகம் மூலமும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அடையாறு ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதால், மணிமங்கலம் சாலை முதல் தர்காஸ் சாலை வரை உள்ள அஷ்டலட்சுமி நகர், புவனேஸ்வரி நகர், மகாலட்சுமி நகர், அமுதம் நகர், ஸ்ரீராம் நகர் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பொதுவான எச்சரிக்கை நடைமுறை Common Alert Portocol மூலம் 9,696 நபர்களது அலைபேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

அனைத்து மீன்பிடி படகுகளும், வங்கக்கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. 45 படகுகள் தேவையான பணியாளர்களுடன் சென்னை மாநகராட்சி பகுதியில் மீட்பு பணிகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தேவைப்படும் இடங்களுக்கு கூடுதலாக படகுகள் அனுப்பும் வகையில் படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

**காஞ்சிபுரம் மாவட்டம், வரதராஜபுரம் பகுதியில் மீட்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தேசிய பேரிடர் மீட்புப் படையின் ஒரு குழு அனுப்பப்பட்டுள்ளது.**

இதுமட்டுமின்றி, தேசிய பேரிடர் மீட்பு படையின் **10** குழுக்கள், கடலூர், நாகப்பட்டினம், மதுரை, திருவள்ளூர் மாவட்டங்களுக்கு தலா ஒரு குழுவும், செங்கல்பட்டு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தலா மூன்று குழுக்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் தலா இரண்டு குழுக்கள் தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**நிவாரண முகாம்கள்**

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராணிப்பேட்டை, திருவள்ளூர், திருவண்ணாமலை, கடலூர், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவாரூர், வேலூர், விழுப்புரம் மாவட்டங்களில் மொத்தம் 185 முகாம்களில், 10,073 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் 2249 நபர்கள் 44 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதுவரை, 26,50,050 உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சென்னையில் தொடர் மழை காரணமாக வெளியில் வர இயலாத நிலையில் உள்ள பொது மக்களுக்கு உணவு வழங்குவதை உறுதி செய்ய

வார்டுக்கு ஒருவர் வீதம் 200 அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவருடன் இணைந்து இந்த பணிகளைக் கண்காணிக்க 15 மண்டலங்களுக்கும் உதவி வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

- செங்கல்பட்டு மாவட்டத்தில், 2843 நபர்கள் 71 நிவாரண முகாம்களிலும்,
- காஞ்சிபுரம் மாவட்டத்தில், 1514 நபர்கள் 39 நிவாரண முகாம்களிலும்,
- கடலூர் மாவட்டத்தில், 49 நபர்கள் 3 நிவாரண முகாம்களிலும்,
- நாகப்பட்டினம் மாவட்டத்தில், 3217 நபர்கள் 12 நிவாரண முகாம்களிலும்,
- பெரம்பலூர் மாவட்டத்தில், 72 நபர்கள் 2 நிவாரண முகாம்களிலும்,
- புதுக்கோட்டை மாவட்டத்தில், 380 நபர்கள் 6 நிவாரண முகாம்களிலும்,
- இராணிப்பேட்டை மாவட்டத்தில், 98 நபர்கள் 2 நிவாரண முகாம்களிலும்,
- திருவள்ளூர் மாவட்டத்தில், 569 நபர்கள் 13 நிவாரண முகாம்களிலும்,
- திருவண்ணாமலை மாவட்டத்தில், 361 நபர்கள் 9 நிவாரண முகாம்களிலும்,
- திருவாரூர் மாவட்டத்தில், 68 நபர்கள் 1 நிவாரண முகாமிலும்,
- விழுப்புரம் மாவட்டத்தில், 822 நபர்கள் 25 நிவாரண முகாம்களிலும்,
- அரியலூர் மாவட்டத்தில், 80 நபர்கள் 2 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**பெருநகர சென்னை மாநகராட்சி**

- மழை நீர் தேங்கியுள்ள 523 பகுதிகளுள், 46 பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர், இராட்சத பம்புகள் மூலம் அகற்றப்பட்டுள்ளது. எஞ்சிய 477 பகுதிகளில் மழை நீரை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.
- மழை நீரால் சூழப்பட்டுள்ள 22 சுரங்கப்பாதைகளில், 10 சுரங்கப்பாதைகளில் மழை நீர் சூழ்ந்துள்ளதால் அவைகள் மூடப்பட்டு மழை நீரை வெளியேற்றும் பணி நடைபெற்று வருகிறது.
- சாலைகளில் விழுந்த 230 மரங்கள் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது. இதுவரை 2007 மருத்துவ முகாம்கள் மூலம் 79,043 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- மழை நீர் சூழ்ந்த பகுதிகளில் உள்ள மக்களை மீட்க 48 படகுகளும், மழை நீரை வெளியேற்ற 46 JCB–களும், 508 இராட்சத பம்புகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.
- 13,345 புகார்கள் வரப்பெற்று, 5,453 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய புகார்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சென்னையில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் 1070, மாவட்டங்களில் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்கள் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசியுடன், 24 மணி நேரமும் இயங்கி வருகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்பான புகார்களுக்கு பொதுமக்கள் 1913 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.
- 1070–ல் இதுவரை 1800 புகார்கள் பெறப்பட்டு 1044 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளது.
- மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண்.1077–ல் இதுவரை 1585 புகார்கள் பெறப்பட்டு, 1431 புகார்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளது.
- பொதுமக்கள் TNSMART இணையதளத்திலும், வாட்ஸ் அப் எண் **9445869848** மூலமாகவும் புகார்களை தெரிவிக்கலாம்.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது, கூடுதல் தலைமைச் செயலர் /வருவாய் நிருவாக ஆணையர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலர் திரு. குமார் ஜெயந்த், இ.ஆ.ப., நில நிருவாக ஆணையர் திரு. எஸ். நகராஜன், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம்,**

**சென்னை**